அனுமன் துதி நாற்பது



குருவின் திருவடியை கும்பிட்டு அடியேனும்

உருவாய் ரகுவரனை உள்ளக்  கண்ணாடியில்

பெறுவேன் அதனால் பிழைகள் நீங்கிடுமே

சேறும் களைந்து சித்தம் குளிருமே

புத்தியில்லா புலன்களோடு புரியாது கேட்கிறேன்

சக்தியுடை வாயுமைந்தா!   சகலவித்தையும் புத்தியும்

தந்துவிடு எனக்கு!  தடைகள் அகற்றிடு!

மந்த நோய் நீக்கிடு!  மனஅழுக்கைப்  போக்கிடு!

-------------------------------------

1. ஞானக் கடலே! ஞாலத்தை ஒளிரவைப்பவனே!

வானரத் தலைவனே! வந்தனம் வந்தனம் !

2. ஒய்யார  தூதனே! ஒப்பில்லா ஆற்றலே!

அய்யமில்லா வாயுமகனே! அஞ்சலி புதல்வனே !

3. வீரத்தின் திலகமே! வெற்றியின் வைரமே!

ஓரமாய் தீயவைஓடிட  ஒளிரும் நல்லெண்ணமே!

4. பொன்னிற உடலுடன் பொலிவான தோற்றமே!

செந்நிற செவிகுண்டலமே! சுருண்ட கேசமே!

5. கரத்தில் ஆயுதம் காத்திடும் கொடியே!

உரமாய் பூணலே உறுதியான தோளே !

6. சங்கரன் அவதாரமே சகம்புகழ் ஆற்றலே

மங்காத கேசரீயின் மைந்தனான ஒளியே !

7. வித்தையில் சிறந்தவனே ! விநயமாய் புரிபவனே!

சத்திய இராமகாரியம் சட்டென செய்பவனே !

8. சிந்தையில் இராமனும் சீதையும் இலக்குவனும்

விந்தையாய் நின்றிட வேந்தன் கதை சுகமே!

9. உருவத்தைச் சுருக்கியே உலகத்தைக் கண்டவனே

உருவத்தைப் பெருக்கியே ஊரினை அழித்தவனே !

10. அரக்கரை அழித்திட ஆவேசம் பூண்டவனே !

அரசனின் வேலையை அழகாய் செய்தவனே !

11. இலக்குவனை மீட்கவே எடுத்தனை சஞ்ஜீவமலையை

கலகலத்து இராமனும் கட்டிஉன்னை அணைத்தனை

12. கட்டித்தழுவி இராமன் களிப்புடன் உன்மீது

குட்டித் தம்பி பரதன்போல் குதூகல அன்புகொண்டானே !

13. ஆயிரம் உடல்கொண்ட ஆதிசேஷனே உன்பெருமை

வாயினால் பாடியதில் வையுலகம் அறிந்ததே!

14. சனகாதி முனிவரும் சரஸ்வதி தேவியும்

தினமும் பாடிட  திக்கெட்டும் பரவுமே

15.  தெய்வீக  புலவரும் திக்பாலரும் பாவாணரும்

மெய்யறிந்து பாடிட முயன்றாலும் இயலாதே !

16.  சுக்ரீ வன் உன்னால் சுகமாய் பெற்றானே

அக்ரமம் அழிந்து அரசனும் ஆனானே!

17. உன்சொல் கேட்டு உரிமை பெற்றானே!

மன்னனாய் விபீடணன் மகுடம் சூடினானே!

18.  வானிலே கண்ட வளமான பழமென்று

ஆணித்தரமாய் நீயும் ஆகாசத்தில் பறந்தாயே !

19.  கோதண்டனின்  சின்னமாய் கொண்டாயே கணையாழி

சாதனை சிங்கமாய் சமுத்திரம் தாண்டினையே !

20.  கடினமான செயலும் கணத்தில் எளிதாகுமே

அடியேனை உன்னருள் அனுதினம் காக்குமே !

21.  வள்ளல்  இராமனின் வாயிற் காப்போனே !

அள்ளிடும் உன்னருளே அனுமதி தந்திடுமே !

22.  உன்னைச் சரணடைய உலகில் யாவும்சுகமே!

என்னைக் காத்திடுவாய்  இனிஏன் பயமே !

23.  உன்வலிமை அடக்க உன்னாலே முடியுமே

உன்வலிமை அதற்கு  உலகம்மூன்றும்  அடங்குமே!

24. மாவீரன் உன்நாமம் மனத்தால் ஜபித்திட

ஆவியும் பூதமும் அருகினில் வாராதே !

25.  அனுதினம்  ஜபித்து அனுமனை நினைத்தால்

அணுகாது நோய்கள் அகலும் வலிகளே!

26.  மனத்தாலும் வாக்காலும் மாறாத செயலாலும்

தினமும்  நினைக்க தீர்ந்திடும் சங்கடமே !

27. சிந்தையில் இராமனை சிந்தித்து விட்டால்

விந்தையாய் நீயே வேலைகள் முடிப்பாயே!

28. மனத்தின் ஆசைகளை மண்டியிட்டு கேட்டுவிட

விநயமாய் அளித்து வீரியம் தருவாயே !

29. மாறும் யுகங்களில் மங்காது உன்பெருமை

பாரும் புகழ்ந்திட  பாதையும் மிளிருமே !

30. நல்லவரைக் காப்பவனே! நாயகனின் நண்பனே

அல்லோரை அழித்து அகிலம் காப்பவனே !

31. எட்டு சித்தியும் எட்டாத செல்வமும்

கட்டுக்குள் வைத்து காத்தருளி நிற்பவனே !

32. பக்தியில் திளைத்து பரவசம் ஆனவனே

மக்களின் நேசனே! மன்னவன் தோழனே !

33. உன்னைப் பாடியவர்  உள்ளத்தில் இராமனிருக்க

தன்னாலே அழிந்திடுமே  தாரணியின்  துக்கமே

34. இப்பிறவியில் உன்னை இனிதே பாடிட

எப்பிறவியிலும் நான் இராமனின் பக்தனே!

35. உள்ளத்தில் குடியாய் உன்னைக் கொண்டவர்

கள்ளமின்றி மறந்தாலும் காத்தருள் புரிபவனே !

36. சங்கடம் நீக்கி சாதனை புரிவாயே!

எங்களின்  வலிபோக்க  எழுந்தருளும் வீரனே !

37. உருவத்தைக் கொண்டு உணர்வுகள் வென்றவனே!

குருவாய் நின்றே குலத்தைக் காப்பவனே !

38. அனுமன் துதியை அனுதினம் துதிக்க

அணுகாது பிறவிப்பிணியே! ஆனந்தம் பெருகுமே !

39. நாற்பது செய்யுளை நாள்தோறும் படித்திட

காப்பது திண்ணம் கைலாயனே உறுதி !

40. துளசிதாசன் இனிதே துதித்த வடமொழியை

வளமான தமிழில் வந்தனத்துடன் உரைத்தேனே!

(இராம இலக்குமண ஜானகி என்றே

இயம்புவோம் அனுமனின் நாமத்தை )

பின் குறிப்பு- எழுதுவதற்கு முன்பு இராமன் ஆரத்தழுவும் படமும், எழுதிக் கொண்டிருக்கும்போது அனுமனின் தியானப் படமும், இயம்பி முடித்த வேளையில் இந்தப் படம் கைபேசியில் கிடைத்தது அவன் செயலே !

